ஆகஸ்ட்–2023 முதல் அக்டோபர்–2023 முடிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.
(Pay Authorization for the month of August 2023 to October –2023)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**கடித(efile) எண்.3647/பக5(1)/2023–1, நாள் 04.09.2023**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் – அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 நிலவரப்படி மாணவர்கள்:ஆசிரியர் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட 3000 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (Surplus Post without person) தோற்றுவிக்கப்பட்ட வெவ்வேறு அரசாணைகளை ஒருங்கிணைத்தும், அப்பணியிடங்களுக்கு அப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது – இப்பணியிடங்களுக்கு ஆகஸ்ட்–2023 முதல் அக்டோபர்–2023 முடிய மூன்று மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization ) வழங்குதல்–சார்பு.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.92, பள்ளிக் கல்வி பக5(1)த் துறை, நாள்.18.05.2022.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.009697/எல் / இ3/2023, நாள்.17.08.2023

*********

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், ஏனையவற்றோடு, அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 அன்றைய நிலவரப்படி மாணவர்கள்:ஆசிரியர் எண்ணிக்கையின் அடிப்படையில் 9 மாவட்டங்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட 3000 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் (Surplus Post without person) பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவற்றினை

நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்க ஏதுவாக, அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட வெவ்வேறு அரசாணைகளை ஒருங்கிணைத்தும் மற்றும் அப்பணியிடங்களுக்கு, அப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீடிப்பு வழங்கியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை ஆகிய ஒன்பது (9) மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 3000 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு, அப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு 17.05.2023 அன்று உடன் முடிவடைந்துள்ளது என்றும் தற்பொழுது, இப்பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு அரசாணை பெற காலதாமதம் ஆகும் நிலையில், இப்பணியிடங்களுக்கு 018.08.2023 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக்கொடுப்பாணை(Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி 9 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களில் பணிபுரியும் 3000 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு முடிவுற்ற நிலையில், இப்பணியிடங்களுக்கு 17.05.2023 முதல் 31.12.2025 மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், இப்பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஊதியம் பெறத்தக்க வகையில் இப்பணியிடங்களுக்கு 18.08.2023 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக்கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 3000 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 17.05.2023 முதல் 31.12.2025 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 அன்றைய நிலவரப்படி மாணவர்கள்:ஆசிரியர் எண்ணிக்கையின் அடிப்படையில் 9 மாவட்டங்களுக்கு இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட 3000 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஆகஸ்ட்–2023 முதல் அக்டோபர் – 2023 முடிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய

கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஆகஸ்ட்–2023 முதல் அக்டோபர்–2023 முடிய மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

4/9/23

(அரசு சார்புச் செயலாளர்),
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

4.9.23

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

மாநிலக் கணக்காயர், சென்னை–18.

நிதி(கல்வி–II)துறை , சென்னை–9.

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

இவ்வியக்கக ந.க.எண்: 009697/எல்/இ3/2023 நாள்: 04.9.23

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

04/9/23

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்,